DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.194/2024 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| Name | : | **முனியசாமி** |
| Father's Name | : | **ராஜேந்திரன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி சிறையிலிருந்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 06.11.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது விளாக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிதி நிறுவனத்தில் கிளை மேலாளாராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி ஆனந்தக்குமாரை தெரியும். பட்டியல் சாட்சி 2 அஜய் என்பவரை தெரியும். பட்டியல் சாட்சிகள் 3 முதல் 5 கர்ணன், கிருஷ்ணன், புலிப்பாண்டி, முனியசாமி ஆகியோரை தெரியும். சம்பவ சமயத்தின் போது நான் மதுரையில் உள்ள செந்தாமரை கல்லூரியில் பி.ஏ . தமிழ் 2-ம் ஆண்டு படித்து வந்தேன். அஜய்யும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். எதிரி ஆனந்தக்குமார் மானாமதுரையை சேர்ந்தவர் ஆவார். எதிரிக்கும் அஜய்க்கும் மது அருந்தும்போது ஏற்கனவே பிரச்சினை ஏற்பட்டு முன் விரோதம் இருந்தது.

2. கடந்த 14.11.2020 ம் தேதியன்று மதியம் 3.30 மணியளவில் நானும் அஜய்யும் தாயமங்கலம் செல்லும் ரோட்டில் உள்ள MB மாஹால் முன்பு நின்று கொண்டிருந்தோம். எதிரி ஆனந்தக்குமார் அங்கு வந்து அஜய்யை பார்த்து ஏன்டா தேவிடியா புண்ட மகனே, அவுசாரி மகனே என்று ஆபாசமான அசிங்கமான வார்த்தைகளால் அஜய்யை திட்டி எதிரி வைத்திருந்த பிச்சுவாகத்தியால் அஜய்யின் நெஞ்சில் செத்து தொலைடா என்று சொல்லிக்கொண்டே குத்தினார். மீண்டும் அஜய்யின் கழுத்தில் குத்தப்போகும்போது நான் தடுத்த போது எனது இடது முன்கையில் குத்தினார். (**சாட்சி தனது இடது முன்கையை நீதிமன்றத்தில் காண்பிக்கிறார், அதில் இடது மணிக்கட்டிடிலிருந்து முழங்கை வரை நீளமான தழும்பு காணப்படுகிறது**). அதன்பிறகு எதிரி ஆனந்தக்குமார் எனது வலது பக்க முதுகில் குத்தினார். (**சாட்சி தனது சட்டையை உயர்த்தி வலதுபக்க முதுகில் உள்ள காயத்தழும்பை நீதிமன்றத்தில் காண்பிக்கிறார்**).

3. எதிரி ஆனந்தக்குமார் என்னை குத்தும்போது நீயும் செத்துப்போடா என்று சொன்னார். நாங்கள் கத்தியபோது அருகில் இருந்த கர்ணன், புலிப்பாண்டி, கிருஷ்ணன், முனியசாமி ஆகியோர் சம்பவயிடத்திற்கு ஓடிவந்தார்கள். அதன்பிறகு எங்கள் இருவரையும் மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு வெவ்வேறு இருசக்கரவாகனங்களில் அழைத்து சென்றார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு மேல் சிகிச்சைக்கு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அஜய்க்கு பலத்த காயம் ஏற்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் அங்கு இருந்தவரை அவரது அப்பா மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் சிவகங்கை மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது எதிரி மீது நடவடிக்கை வேண்டி போலிசாரிடம் எழுத்து மூலமான புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த புகார் தான். அந்த **புகார் மனு அ.த.சா.ஆ.1** ஆகும்.

4. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பிச்சுவாகத்தி எதிரி என்னை குத்தும்போது பயன்படுத்தியது தான். அந்த **பிச்சுவாகத்தி அ.த.பொ.சா.1** ஆகும். எனது இடது கை நடுவிரல் வேலை செய்யாததாலும் மேலும் முதுகில் குத்தியதால் ரத்தம் உடலில் இறங்கிவிட்டதாலும், எனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டுவிட்டது அதனால் என்னையும் மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை**

**மறு விசாரணை: இல்லை**

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.11.06 12:59:20 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**